645

5ஜீ
2-57

முல்லைக் கொடி

சான்றாண்மை இதழ் - குருகுலத் தாள்

[வெள்ளிக் கிழமையில் கிழமைப் பதிப்பு]

ஆசிரியர்: இளவழகனார்

கிளை 9	துன்முகி, பங்குனி 30உ. சித்திரை 7உ 12உ 12-4-57, 19-4-57 26	தளிர் 26-7-8

9-ம் ஆ...
(1...
உள்நாடு ரூ.
வெளி நாடு ரூ. 6 0

ஆயுள் -
கையொப்பம் ரூ. 100 0 0

முகவரி:
குருகுலம்,
மதுராந்தகம் (அஞ்.);
செங்கற்பட்டு மாவட்டம்:
தமிழ் நாடு.

REGISTRAR OF NEWSPAPERS
3 - MAY 1957
MADRAS

செய்தித்தாள் 'முல்லைக் கொடி' பற்றிய
உரிமைப் பதிவு முதலிய விவரங்கள்

பட்டி IV

1.	வெளியாகும் இடம்;	குருகுலம், மாம்பாக்கம், மதுராந்தகம், (அஞ்சல்)
2.	,, காலம்:	வாரந்தோறும்.
3,	அச்சிடுவோர் பெயர்:	தி. சு. பாலசுந்தரம். (இளவழகனார்)
	,, இனம்:	இந்து.
	,, முகவரி:	குருகுலம், மதுராந்தகம், அஞ்சல்.
4.	வெளியிடுவோர் பெயர்,,	
	,, இனம்,,	,,
	,, முகவரி,,	
5.	பதிப்பாசிரியர் பெயர்,,	
	,, இனம்,,	,,
	,, முகவரி,,	
6.	உரிமையாளர் பெயர் முகவரி முதலியன	,,

மேற்குறிப்பிட்ட விவரங்கள் உண்மை யானவை என்று தி. சு. பாலசுந்தரம் என்னும் நான் மனச் சான்றுடன் இதன் மூலம் உறுதி கூறுகிறேன்.

தி. சு. பாலசுந்தரம்.

('முல்லைக் கொடி' வெளியீட்டாளர் கையொப்பம்)

'என்கடன் பணி செய்து கிடப்பதே'

யாதும் ஊரே யாவரும் கேளிர்.
தீதும் நன்றும் பிறர்தர வாரா''
—புறநானூறு.

முல்லைக் கொடி

இலை 9	துன்முகி, பங்குனி 12-4-57	தளிர் 25

மாஸ்கோவில் தமிழ்

இந்தியத்துணைக் கண்டத்தின் வரலாறு பொதுவாக வட இந்திய வரலாருகவே இருந்து வந்துள்ளது. இன்றும் அதே நிலைதான்.

சிறந்த வரலாற்ருசிரியர்களாகத் திகழ்ந்த வின்ஸெண்டு ஸ்மித்துப் போன்ருரும் தமக்குக் கிடைத்த குறிப்புக்கள் புறச் சான்றுகள் துணைகொண்டு வடநாட்டு வரலாற்றையே மிக விரிவாக எழுதிப் போந்தனர்,

திருக்குறள் சிலம்புச் செல்வம் போன்ற தமிழ் நூல்களின் கருத்துச் செழுமையைச் சிறிதளவு கண்டவுடன் ஸ்மித்து ''இத்தகைய மொழியினிமை கருத்தினிமை யாமறிந்த மொழிகளிலே இல்லையே! இத்தகைய மொழிச் செல்வம் படைத்த தமிழகம் நன்ருக அறியப்படத் தக்க வகையில் வரலாறெழுத இயலவில்லையே'' என்று தம் வருத்தத்தைத் தாம் எழுதிய வரலாற்றிற் குறிப்பிட்டுள்ளனர்:

தமிழகப் பெருமைகளைத் தெற்றெனவிளக்கும் வரலாற்றுச் சான்றுகள் இங்கு இல்லை என்பதோடு நம் நாடு, மொழி இவற்றின் அருமை பெருமைகளை வெளியுலகுக்கு எடுத்துரைக்க வல்ல அறிஞர்களையும் இதுவரை நம் தமிழகம் பெறவில்லை என்பதும் இக்குறைக்கு ஒரேது வென்று சொல்லலாம்.

வங்காளத்தினின்று மேனுடு சென்ற விவேகானந்தரால் இந்தியர் பொதுவாக பெருமை பெற்ருலும் வடநாட்டின் பெருமையே சிறப்பாக ஒருபடி மேலோங்கியது.

அங்ஙனமே தமிழகத்துச் சான்ருேர் வெளிநாடுகளுக்குச் செல்லும் வாய்ப்புப் பெற்றிருந்தால் நம் நாடு மொழி இவற்றின் பெருமைகளை அந்நாடுகள் அறியும் நிலைமை ஏற்பட்டிருக்கும்.

மில்டன், போன்ற மேனுட்டுப் பெருங்கவிஞர் காவியங்களுக்கெல்லாம் எத்தனையோ மடங்கு சிறந்த காவிய நூல்கள் கணக்கின்றிப் படைத்துள்ள தமிழ் மொழியின் பெருமையும் தமிழ் நாட்டவர் சீர்த்தியும் வெளியுலகம் கண்டு வியந்திருக்கும்.

அத்தகைய வாய்ப்பு இதுவரை பெருதது நம் தமிழகத்தின் தவக்குறைதான்.

இன்று மகிழ்ச்சிக்குரிய செய்தியொன்று நமக்கெட்டியுள்ளது.

தமிழகத்தில் விடி வெள்ளி தோன்றிவிட்ட தென்பதனை இச் செய்தி இயம்புகின்றது.

சோவியத் ரஷ்யா, தமிழ் மொழியின் அருமையை நன்குணர்தற்குத் தமிழ் மொழி வல்ல அறிஞர் பலரை அந்நாட்டுக்கு அழைத்திருப்பதாகத் தெரிகிறது.

மாஸ்கோ வானெலி அலுவலகத்தில் தமிழ்மொழி வல்ல அறிஞர்பலர் அண்மையில் அமர்த்தப் பெற்றிருக்கலாம்!

சோவியத் அரசியல் அமைச்சர்பேரவையில் கலை பகுதியில் பணியாற்றுதற் கென்று கும்பகோணம் அரசினர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் திரு. அ. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் மாஸ்கோ நகருக்கு மிக அண்மையில் செல்ல விருக்கின்ருர்.

இவர் ஆங்கு மொழி பெயர்க்கும் பணியில் ஈடுபடுவார் என்று தெரிகிறது.

இன்னும் இதுபோன்று தமிழகத்தினின்று ஆராய்ச்சி நுண்ணறிவு மிக்க அறிஞர் பலர் வெளிநாடுகளுக்குச் செல்லும் வாய்ப்புக்களை நம் ஆட்சியினர் தேடித்தருவது நம் எதிர்காலச் செழிப்புக் கெல்லாம் வழிகோலுவதாகு மல்லவா?

* * * *

கலைவளர்த்த கருணை வள்ளல் அழகப்பச் செட்டியார் நம்மைப் பிரிந்தது ஆற்ற முடியாத் பெருந்துயரம் தருகின்றது. நாட்டுச் செழுமை, கல்வியின் அடிப்படையினின்றுதான் வளர்ச்சி பெறும் என்று நன்குணர்ந்த அறிஞர் அழகப்பச்

(7-ம் பக்கம் பார்க்க)

கலைப் பகுதி – உள வலிமைக்கு (முன் தொடர்ச்சி)

விமர்சனக் கலை

"இளம் பூரணன்"

2

விமர்சனத்தால்நாட்டில்இலக்கியம் இனிது வளர்கிறது. ஒவ்வொருநாட்டிலும் இன்று இலக்கியம் அடைந்துள்ள வளர்ச்சியும்பெருமையும் விமர்சனத்தினால்தான் என்று துணிந்து கூறலாம். நேற்றுத் தொடங்கிய மொழிகள்கூட இன்று இமயம் போன்ற பெருமை பெற்றிருப்பதற்குக்காரணம்விமர்சனமே.

இலக்கிய வளர்ச்சிக்கு விமர்சனம் தேவைதான் என்றாலும் அதனைக்கையாளும் வகையில் மிக மிக விழிப்பாக இருக்க வேண்டியிருக்கிறது. மேனாட்டு விமர்சனங்களில் பெரும்பாலும் காய்தல் உவத்தலாகிய பண்புகள் காணமுடியாது. தமக்கு நூலாசிரியர் நன்கு தெரிந்தவர், வேண்டியவர் என்பதனாலோ நெருங்கிய சுற்றத்தார், நண்பருக்குத் தெரிந்தவர் சுற்றத்தார்க்குத் தெரிந்தவர் என்பதனாலோ அவர் இயற்றிய நூல்களிற் குற்றங்களை மறைத்து வானளாவப் புகழ்வதும் தமக்கு வேண்டாதவர், அயலார் என்பதனால் அவர் நூல்களிற்காணும் சிறப்பியல்களைச் சிறிதும் எண்ணாமல் எங்கோ சிறிதுகாணும் குற்றங்களைப் பெரிதாக வளர்த்துக் காட்டி நூலைப் பழிக் கருத்துக்களாற் பாழ் செய்வதும் விமர்சனத்தின் இலக்கணமன்று. இத்தகைய நடு நிலைமை திறம்பிய செயல்களால் நாட்டில் இலக்கிய வளர்ச்சியே குன்றிவிடும். தவறான கருத்துக்களும் நாட்டின் தேவைக்கும் நல்வாழ்வுக்கும் புறம்பான தீய கருத்துக்களும் நாட்டில் வேரூன்றி விடுதற்கும் ஏதுவாகும்.

காய்தல் உவத்தல்
அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார்
கண்ணதே- காய்வதன்கண்
உற்றகுணம் தோன்றாத
தாகும் உவப்பதன்கண்
குற்றமும் தோன்றாக் கெடும்.

(அறநெறிச் சாரம்)

என்றபடி வெறுத்தலோ விரும்புவதோ இல்லாமல் நடுநிலை நின்று ஒரு நூலை ஆராய்வதே சான்றோர் செயலாக இருத்தல்வேண்டும். நூலைச் செய்தோன் எவனாகவாவது இருக்கலாம். ஆனால் நூலைப் பற்றிய ஆராய்ச்சியே அறிஞர்க்கு வேண்டுவது. ஒருவரிடத்துள்ள இயல்பான வெறுப்பினால் அவன் செய்தநூலிற் காணும் அழகியல்புகள் தோன்றாமற் போதலும் இயல்பு. அதேபோல் தமக்கு வேண்டியவன் என்பதனால் அவன் நூலிற் பொதிந்துகிடக்கும் குற்றங்களும் தம்கருத்துக்கு எட்டாமற்போதலும் உண்டு.

தம் விருப்பு வெறுப்புக்களை அடிப்படையாகக் கொண்டு நூல்விமர்சனம் செய்பவர்கள் இலக்கிய உலகத்துக்கே அன்றித் தாம் வாழும் நாட்டுக்கே பெருந்தீங்குவிளைப்பவராவர். ஒருநூல் விமர்சனம் செய்யப் பெற்றதென்றால் மக்கள் இனித் தயங்காமல் அந்நூலைக்கற்கலாம்; விமர்சகர் கண்டு கூறிய குற்றநற்றங்களைத் துணைகொண்டு அந் நூலை இனிது கற்றுத் தெளியலாம் என்பதுதான் பொருள். எனவே விமர்சிக்கப் பெற்ற நூலைக்கற்று, இன்புறும் மாந்தர் வாழ்வில் தாம்கற்ற நூற்கருத்துக்களுக்கிசைய வழிகோலி வாழும் முறைகள் நல்லவையாக இருப்பினும் தீயனவாக இருப்பினும் அவைகட்கெல்லாம் விமர்சகர் கருத்துக்களே பெரும்பாலும் காரணமாக விளங்குகின்றன.

ஆகவே விமர்சனம் செய்யப் புகுவோர் தம் மிகப்பெரிய பொறுப்பினை நன்கு உணர வேண்டும். தம் உள்ளத்தில் இடம்பற்றிய மிகச்சிறிய விருப்பு வெறுப்புக்கள் இலக்கிய உலகிலும் மக்கள்வாழ்விலும் உண்டாக்கக் கூடிய புரட்சித்தன்மை வாய்ந்த மாறுதல் விளைவுகளையும் எதிர்காலத்தில் விளைவிக்கும் தீங்குகளையும் தீரச்சிந்தனைசெய்து செயலாற்றத் தொடங்கவேண்டும். இத்தகைய சிந்தனையாளரால் தரப்படும் விமர்சனங்களால்தான் இலக்கியங்களுக்கும் நாட்டுக்கும் ஏற்றம்பெருகும்.

(வரும்)

Phone. 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்.
53. கிடங்குத் தெரு. சென்னை 1.

சமயப் பகுதி – அருள் வலிமைக்கு (முன்தொடர்ச்சி)

உள்ளொளிர் இறைவன் உடலிடங் கொண்டான்

(வே. ந. நாராயணன்)

ஆனால். அத்துன்பத்தினின்றும் எனதிறைவா என்னை நீ விடுவித்துவிட்டாய். என்னுள்ளத்தில் இடம் பெற்றதுபோல் உடலிலும் இடம் பெற்றுவிட்டாய். உள்ளமும் உடலும் ஒன்றையே நாடின் ஒன்றாலேயே இயக்கப்படின் அதுவே துன்பம் சிறிதுமற்ற இன்பத்தைச் செய்யும். அத்தகைய இன்பம் பயக்கும் உள்ள உடல் உறவு, எனக்கு மட்டும் என்றுமே பிரியாதவாறு வாய்த்து விட்டது.

அறிவுப் பண்புகளாலான உள்ளத்தில். இடம்பெற்ற எம்பெருமானே! நீ எனது புலன்களாலாய உடலிலும் இடம் பெற்றுவிட்டாய். பார்க்கின்ற பொருள்களி லெல்லாம் உன்னையே காணுகின்றேன். கேட்கின்ற மொழிகளி லெல்லாம் உனது திருப் பெயரையே கேட்கின்றேன். சுவைக்கும் பொருள்களிலெல்லாம் உனது கருணையின் இனிமையையே அனுபவிக்கின்றேன். நுகர்கின்ற பொருள்களிலெல்லாம் உனது அருளே மணக்கக் காணுகின்றேன். தொடுகின்ற பொருள்களிலெல்லாம் உனது உடலின் மென்மையையே ஸ்பரிசித்து ஆனந்திக்கின்றேன்.

உள்ளம் எண்ணுவதையெல்லாம் உடலாலும் (பொறிகளாலும்) உணர்கின்றேன். உடல், அறிபவைகளை யெல்லாம் உள்ளத்தாலும் கருதுகின்றேன். மனிதர்கட்குத் தங்கள் விருப்பு வெறுப்புக் களினால் போராட்டங்களை — இடையூறுகளையுண்டு பண்ணும் உள்ளமும் உடலும், என்னளவில் ஒன்று சேர்ந்து இயங்கவாரம்பித்து விட்டன. ஒன்றில் ஒன்று அடங்கி ஒத்தமைந்து விட்டன.

நீ யொருவனே உள்ளத்தையும் உடலையும் இணைத்து இயக்குகின்றாய். உள்ளத்தில் நிறைந்திருந்த நீ உடலில் இடம்பெறுதிருந்த காரணத்தினால்தான் நேற்றுவரையில் எனது உடல் புற ஆரவாரங்களிலே சிக்குண்டு உள்ளத்துடன் வேறுபட்டு நின்று துயரைவிளைவித்தது. ஆனால், இன்று நீயே யெனது, உள்ளத்தில் இடம்பெற்றது போல் உடலிலும் இடம் பெற்றுவிட்டாய். 'ஊனும் உயிரும் உணர்வும் போல் உள்ளும் புறத்தும்' நின்று இயக்குகின்றாய்.

அறிவாய உள்ளம் உன்னையே எண்ணுவது போலவே. புலன்களாலாய உடலும், உன்னையே பார்த்தும், கேட்டும், தொட்டும், சுவைத்தும், முகர்ந்தும் இன்புற வாரம்பித்து விட்டது.

வண்டியின் இருமாடுகளையும் இணைத்துச் செலுத்தும் திறம் பெற்ற சாரதியாகவே என்னிடத்தில் வந்தமர்ந்து விட்டாய். எனது உயிராகிய வண்டியை இழுத்துச் செல்லும் உள்ளமும் உடலுமாகிய இருமாடுகளும் 'நடையில்' மாறுபடுகின்றன. ஒரே நிலையில் ஓட்டக் கூடிய எல்லாமாடுகளையும் போல் இந்த இருமாடுகளையும் ஓட்ட முடிவதில்லை. இம்மாடுகள் செல்லும் வழியோ இடர் நிறைந்தது.

மெய்யும் பொய்யுமாகிய மேடும் பள்ளமும். விருப்பும் வெறுப்புமாகிய சேறும் சகதியும், இன்பமும் துன்பமுமாகிய கல்லும் முள்ளும் இளமையும் முதுமையுமாகிய மழையும்வெயிலும், வெற்றியும் தோல்வியுமாகிய பகலும் இரவும் வழியெல்லாம் அமைந்தும் நிறைந்தும் காணுகின்றன.

அத்தகைய வழியில் இரண்டும் நடையொழுக்கத்தில் மாறுபடுமெனின் துன்பந்தான். இவ்வாறு எல்லோருக்கும்; உள்ள உடல் மாடுகளின் நடையொழுக்க மாறுபாட்டால் துன்பம் நிகழத்தான் செய்கின்றது.

ஆனாலும். அவ்விரண்டையும் ஒன்றாகவும் திறமையாகவும் ஓட்டக் கூடியவன் நீயொருவனே. எனவே இன்று நீ அப்பணியையும் மேற்கொண்டு விட்டாய். நேற்றுவரை உள்ளமெனும் மாட்டின்மேல் மட்டும் கவனம் வைத்து அம் மாட்டை நீயே உரிமையாகக் கொண்டு ஓட்டிக் கொண்டிருந்தாய். உன் விருப்பத்திற்கு உகந்ததாகாத உடலாகியமாடு பலவாறு நடந்து, உள்ளமாட்டோடு இணையாது நடந்து உயிராகிய வண்டியை ஆட்டங்கொடுக்கச் செய்தது. ஆனால், இன்றோ அந்த உடல்மாட்டையும் நீயே ஏற்றுக் கொண்டாய். இரண்டு மாடுகளும் உனக்குச் சொந்தமாகிவிட்டன உன் கட்டுக்கு அடங்கிவிட்டன. திறமற்ற ஒரு மாட்டை வைத்துக் கொண்டு எல்லாவற்றையும் என்னுடையது என்று சொல்லிக் கொண்டு அல்லல்பட்டுக் கிடந்த நான். அந்த மாட்டையும் உனக்காக்கிவிட்டு உன்னை மட்டும் எனக்காக்கிக் கொண்டேன்.

இனி எனக்கு அச்சமில்லை. உள்ளம் உடலைப் பாதிக்கவோ, உடல் உள்ளத்தைப் பாதிக்கவோ இல்லாமல் உள்ளத்தையும் உடலையும் சேர்த்திணைத்து இயக்குகின்றாய். (வரும்)

காற்றினை மாற்றிக் கருத்தைக்கருத்தினில்
ஆற்றுவ தாற்றலென் றுந்திபற
அல்லாத தல்லாதென் றுந்திபற.

காற்றை இயல்பின் அடக்கிக் கருத்தை இறைவன்பால் நிறுத்துவதே ஆற்றல்; அல்லாதது அல்லல். 22.

கள்ளரோ டில்ல முடையார் கலந்திடில்
வெள்ளை வெளியாமென் றுந்திபற
வீடும் எளிதாமென் றுந்திபற.

உடம்பாகிய வீடுடையோர் சிவபிரானாகிய கள்ளரோடு நட்புச் செய்தால், அவர், இவர்கள் வினைச்சரக்குகளைக் களவாடிவிடுவார். 23.

எட்டுக்கொண் டார்தம்மைத் தொட்டுக்
[கொண் டேநின்றார்.
விட்டா ருலகமென் றுந்திபற
வீடேவீ டாகுமென் றுந்திபற.

நிலன் நீர் முதலிய எண் திருமேனியாயிருக்கும் இறைவனைத் தொட்டுக் கொண்டே ஒழுகுவார் பற்றுவிட்டவராவர். 24

மெய்கண்ட நூல்

திருவுந்தியார்

மூலமும் கருத்தும்

அகளமாய் யாரும் அறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்திபற
தானாகத் தந்ததென் றுந்திபற.

இறைவன் உயிர்களின் பொருட்டுத் திருவுருவங்கொண்டுவந்து தன்வண்ணமாக்குவன். 1.

பழக்கந் தவிரப் பழகுவ தன்றி
உழப்புவ தென்பெண்ணே யுந்திபற
ஒருபொரு ளாலேயென் றுந்திபற.

திருவருள்வயமாய்த் தொடர்பாக நின்று பழகுதலால், பழையமலவாசனை அடியோடு அறும். 2.

கண்டத்தைக் கொண்டு கருமம்
[முடித்தவர்
பிண்டத்து வாராரென் றுந்திபற
பிறப்பிறப் பில்லையென் றுந்திபற.

ஞானநெறியோடு கடமையைச் செய்வோர் பிறவிக்கு வாரார். 3.

இங்ங னிருந்ததென் றெவ்வண்ணஞ்
[சொல்லுகேன்
அங்ங னிருந்ததென் றுந்தீபற
அறியும் அறிவதன் றுந்தீபற.

சுட்டறிவினால் அறியாத தரத்தது சிவப்
பேரின்பம். 4

ஏகனு மாகி அனேகனு மானவன்
நாதனு மானானென் றுந்தீபற
நம்மையே ஆண்டானென் றுந்தீபற.

ஒருவனே அநேகனாய்த் தலைவனாய் நின்
றான் ஆண்டவன், 5.

நஞ்செய லற்றிந்த நாமற்ற பின்நாதன்
தன்செயல் தானேயென் றுந்தீபற
தன்னையே தந்தானென் றுந்தீபற.

நம்செயலும் நாம் என்னுநினைவும் அற்றால்
எல்லாம் இறைசெயலாதல் விளங்கும் 6.

கருதுவதன் முன்னங் கருத்தழியப் பாயும்
ஒருமகள் கேள்வனென் றுந்தீபற
உன்ன அரியனென் றுந்தீபற.

அருள் வழி நிற்கும் மெய்யடியார்க்கு
அவர் கருதுமுன் அக் கருத்தும் அழிய விரைந்து
பாய்வன். 19.

இரவு பகலில்லா இன்பவெளி யூடே
விரவி விரவிநின் றுந்தீபற
விரைய விரையநின் றுந்தீபற.

ஆணவ இரவும் மாயைப் பகலுமல்லாத
தூய ஞானத்தில் விரவி விரைந்து பற்றறுக்க. 20.

சொல்லும் பொருள்களுஞ் சொல்லா
[தனவுமங்(கு)
அல்லனாய் ஆனானென் றுந்தீபற
அம்பிகை பாகனென் றுந்தீபற.

இறைவன் அதீதனாயிருந்தும் அருளால்
எல்லாமா யிருக்கிறான். 21.

சித்தமுந் தீய கரணமுஞ் சித்தியாலே
ஒத்ததே யொத்ததென் றுந்தீபற
ஒவ்வாத தொவ்வாதென் றுந்தீபற.

கருவி கரணங்களின் உணர்ச்சி திருவருளில் இயைந்து அமைதலே வீடுபேற்றிற்கு இசைந்த நிலை 25.

உள்ளும் புறம்பும் நினைப்பறில் உன்
[னுள்ளே
மொள்ளா அமுதாயென் றுந்தீபற
முளையாது பந்தமென் றுந்தீபற.

அக வழிபாடும் புறவழிபாடும் அற்ற அகண்ட வழிபாடே பந்தம் முளையாத பேரின்பத்தது. 26.

அவிழ இருக்கும் அறிவுடன் நின்றவர் [கு]
அவிழுமிவ் வல்லலென் றுந்தீபற
அன்றி அவிழாதென் றுந்தீபற

தன்னுணர்ச்சி இயல்பின் நழுவும் ஞான நெறி நின்றவர்க்கே அல்லல் அவிழும். 27.

வித்தினைத் தேடி முளையைக் கைவிட்டவர்
பித்தேறி னார்களென் றுந்தீபற
பெறுவதிங் கென்பெண்ணே யுந்தீபற

காரியங் கட்கெல்லாம் ஏதுவான காரணத்தை நாடியொழுகுவோரே பத்தர்கள். 28.

சொல்லும் இடமன்று சொல்லப்புகுமிடம்
எல்லை சிவனுக்கென் றுந்தீபற
என்றால்நா மென்செய்கோ முந்தீபற

உரைக்கும் இயல்பினதன்று இறையது நிலை; உரைக்க ஒழுகி உணரும் நிலையினது அதுவே செருக்கற்ற இடம். 29.

வீட்டில் இருக்கிலென் நாட்டிலே
[போகிலென்
கூட்டில்வாள் சாத்தியென் றுந்தீபற
கூடிப் படாததென் றுந்தீபற.

வீட்டிலிருந்தாலும் நாட்டிலே போனாலும் ஞானவாள் ஒன்றே அறியாமையைப் போக்கும் 30.

காயத்துள் மெய்ஞ்ஞானக் கள்ளுண்ண
மாட்டாதே
மாயக்கள் ளுண்டாரென் றுந்தீபற
வரட்டுப் பசுக்களென் றுந்தீபற.

உடம்பினுள் அருளின்பங் கொள்ளாமல் மருளின்பங் கொள்ளுதல் வீண். 43.

சிந்தையி னுள்ளுமென் சென்னி யினுஞ்
[சேர
வந்தவர் வாழ்கவென் றுந்தீபற
மடவா ளுடனேயென் றுந்தீபற.

வழிபாடும் ஞானமும் தந்த இறைவன் தமது திருவருட் சத்தியுடன் வாழ்க 44.

வைய முழுதும் மலக்கயங் கண்டிடும்
உய்யவந் தானுரை யுந்தீபற
உண்மை யுணர்ந்தாரென் றுந்தீபற.

உலகத்தின் அறியாமையைப் போக்க வல்ல உய்யவந்த தேவநாயனாரது உரையின் மெய்மையை உணர்ந்தொழுகுவோர் உண்மையுணர்ந்தாராவர். 45.

———

மெய்கண்ட நூல்

திருவுந்தியார்

... ... கருத்துரையுடன்

குருகுல வெளியீடு - 22

உரிமைப் பதிவு:

குருகுலம், மாம்பாக்கம்;
(மதுராந்தகம் அஞ்சல்)
26-4-1957.

குருகுல அச்சகம், மாம்பாக்கம்.

பதிப்புரை:

'சமயம்' என்னும் அருள் நெறி, கலைகளின் தாய்! சான்றோர் அருள் நிலையம் அல்லது குருகுலம் என்பது, முறைப்படி சிறந்த பல்கலைக் கழகமாகவும் திகழ்வதற்குரியது!

அருள் நெறி, அறிவுத் தெளிவும் உருக்கச் சிறப்பும் வாய்ந்தது. முறையே 'ஞானம்' 'பத்தி' என்னும் இவற்றிற்குச் சாத்திரங்களும் தோத்திரங்களும் உதவும்.

தமிழ் மொழியில் மெய்கண்ட நூல்கள் பதினான்கும் சிறந்த சாத்திரங்கள்; அவற்றில், பழமையான முதல் நூல் இத் திருவுந்தியார்!

கருத்துக்கள் பிழிவாகவும் தெளிவாகவும் நுணுக்கமாகவும் உள்ளன. உண்மைகளைச் சுருக்கமாக அறிந்துகொள்வதற்கு இது பெரிதும் உதவும். கருத்துரை, இதற்குத் தக்க திறவு கோல்!

நாடு உயர்நிலையிற் பண்புடன் விளங்குவதற்கு இதைப் போன்ற அருள் நூல்களின் பயிற்சிகள் இன்றியமையாதன! தமிழகம் பயன் கொள்க!

—குருகுலத்தார்.

அவனிவ னான தவனருளா லல்லா[து]
இவனவ னாகானென் றுந்தீபற
என்றும் இவனேயென் றுந்தீபற.

இறைவன் உயிர்களோடு கலந்திருப்பது அருளினால்; இயல்பைநோக்க என்றும் அவன் அவனே; இவன் இவனே. 40.

முத்தி முதற்கொடி மோகக் கொடி
படர்ந்[து]
அத்தி பழுத்ததென் றுந்தீபற
அப்பழ முண்ணாதே யுந்தீபற.

உயிரில் ஆணவக் கொடிபடர்ந்து பிறவிப் பழம் உண்டாயிற்று. அப் பிறவிப் பழத்தை நுகராதே 41.

அண்ட முதலாய் அனைத்தையு முட்
[கொண்டு
கொண்டதைக் கொள்ளாதே யுந்தீபற
குறைவற்று நின்றதென் றுந்தீபற.

மாயையின் வழியே திருவருளை நுகர விரும்பாதே; தனித்த அருணிலையே குறைவற்ற செல்வம். 42.

சாவி போம் மற்றைச் சமையங்கள்
புக்குநின்(று)
ஆவி யனாதேயென் றுந்தீபற
அவ்வுரை கேளாதே யுந்தீபற.

வீணான பிற சமயங்களிற் புகுந்து உயிர்க் குறுதியை இழத்தலாகாது. 31.

துரியங் கடந்தஇத் தொண்டர்க்குச்
[சாக்கிரந்
துரியமாய் நின்றதென் றுந்தீபற
துறந்தார் அவர்களென் றுந்தீபற.

தன்னுணர்வு நீங்கி நனவிலேயே மேல் நிலைநிகழப்பெறுவோரே துறந்தாரெனப்படுவார். 32.

பெற்றசிற் றின்பமே பேரின்ப மாயங்கே
முற்ற வரும்பரி சுந்தீபற
முளையாது மாயையென் றுந்தீபற.

ஞானிகட்கு ஊழினால் நேரும் சிற்றின்பமும் திருவருட் கண்ணால் உணரப்படு மாகலின் பேரின்பமாய் நிகழ்ந்து பந்தம் பெருமற்போம். 33.

அஞ்சே யஞ்சாக அறிவே யறிவாகத்
துஞ்சா துணர்ந்திருந் துந்திபற
துய்ய பொருளிதென் றுந்திபற.

சாதனமும் ஞானமுங் கொண்டு இடைய
றாது பழகின் தூய்நிலை அடையலாம். 10.

தாக்கியே தாக்காது நின்றதோர் தற்பரம்
நோக்கிற் குழையுமென் றுந்திபற
நோக்காமல் நோக்கவென் றுந்திபற.

கலந்துங் கலவாமலு நிற்குங் கடவுள் சுட்
டறிவிற்கு ஒளிக்கும்; திருவருட்கண்ணுற்காண்க. 11

மூலையிருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியரென் றுந்திபற
தவத்தின் தலைவரென் றுந்திபற.

மூலையாகிய உடம்பிலிருக்கும் உயிரை
அருள்வெளியிலுய்ப்பவர் கடவுள்; சிவபிரான்
தவத்தின் தலைவ ரெனப்பட்டார். 12.

ஓட்டற்று நின்ற உணர்வு பதிமுட்டித்
தேட்டற் றிடஞ்சிவம் உந்திபற
தேடும் இடமதன் றுந்திபற.

போதலும் வருதலுமில்லாத ஞானமோன
நிலையே சிவத்தின் இடம். 13.

கிடந்த கிழவியைக் கிள்ளி யெழுப்பி
உடந்தை யுடனேநின் றுந்திபற
உன்னையே கண்டதென் றுந்திபற.

உலகத்தில் மறைந்து கிடக்குந் திருவருட்
சத்தியை யெழுப்பி அதனைப் பின்பற்றுக. 15.

பற்றை யறுப்பதோர் பற்றினைப் பற்றில் [அப்
பற்றை யறுப்பரென் றுந்திபற
பாவிக்கில் வாராதென் றுந்திபற.

திருவருளைப் பற்றிப் பிற பற்றுக்களை
அறுக்க. 14

மொழிப் பகுதி – அறிவு வலிமைக்கு [முன்தொடர்ச்சி]

துன்பம் ஏன்?

(மணி)

ஒரு பழமொழி உண்டு "தினைவிதைத்தவன் தினை அறுப்பான், வினைவிதைத்தவன் வினை அறுப்பான்" என்பது அது. ஒருகாணி நிலம் இருக்கின்றது. அதிலே தினையைப்போடுகிறான். அது வளர்ந்து மிகுதியாகத் 'தினை' தருகின்றது. அதேபோன்றுவிதைக்கும் வினை நல்லதாயிருந்தால் நன்மையும், தீதாயிருந்தால் தீமையும் அது தரும். அது கொடுத்தே தீரும். இதிலிருந்து இன்னொன்றும் அறியலாம். விதைக்கும் தினையின் அளவோ குறைவு. ஆனால் அறுக்கும் தினையின் அளவோ விதைப்பதை விட அதிகமேயாகும். எனவே அதேபோன்று நாம் செய்யும் செயலும் அதுபோன்றதொரு பலனையே கொடுக்கும். எனவே சிறிதளவே துன்பம் செய்யினும் பெரிதளவாகவே நமக்குத் துன்பம் வந்து சேரும்.

ஒருவன் நல்ல ஒழுக்கமுடையவன். மற்று ஒருவன் தீய ஒழுக்கமுடையவன். இவர்களிலே முன்னையவன் நல்ல ஒழுக்கமுடையவனாதலால் அவன் இன்பமாகவே வாழ வழி ஏற்பட்டு விடும். பின்னையவன் தீயொழுக்கமுடையவனாதலால் அவன் அடிக்கடி தீமையைப் பெற்றே உழலுவான்.

ஆகையினால் செய்யும் செயல் பிறர்க்குத் தீமை பயவாததாக இருக்க வேண்டும். அப்படியிருந்தால் அது தனக்கு எந்த விதமான தீமையையும் செய்யாது. தீமை எதுவும் இல்லையாதலால் துன்பம் இல்லாவிடினும் துன்பமிருக்காது. செயல் ஆற்றுவது மக்களின் இயல்பு. தீயவை செய்யவில்லையென்றால் நல்லவையாகிலும் செய்யவேண்டும். ஆகவே நன்மை அடைதல் உறுதி எனலாம். பிறர்க்குத் தீயவை செய்தால் அது எவ்வாறு தன்னைக் கெடுக்கும் என்று வள்ளுவர் குறளிலே அழகாக கூறுகிறார்; அது,

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடியுறைந் தற்று

என்பதாகும்.

ஒருவன் தெருவிலே செல்லுகிறான். அவனுடனே அவன் நிழலும் செல்கின்றது. அந்த நிழல் இடத்திற்கு ஏற்றாற்போல் நீண்டும் குறுகியும் காணுகின்றது. அவன் முடிவாக வீட்டினுள் நுழைகிறான் அப்பொழுது அந்த நிழல் அவனுடைய அடிகளிலே வந்து தங்கி விடுகின்றது. பிறகு அவன் வீட்டை விட்டு வெளிக்கிளம்புகிறான். அவனுடைய அடிகளிலே தங்கிய அந் நிழ மறுபடியும் அவன் செல்லுமிடமெங்கும் அவனுடனேயே செல்லுகின்றது. அது பிரிவதேயில்லை.

ஒருவன் பிறர்க்குச் செய்யும்கெடுதியும், நிழல்போல அவனைத் தொடர்ந்தே பற்றிக் கொண்டுவரும். அது அவனைவிடவே விடாது.

எனவே நாம் இதிலிருந்து தெளியலாம், ஒருவன் பெறும் இன்பமும் துன்பமும் அவன் செய்யும் செயலியே உள்ளது என்று. நிற்க;

சூழ் நிலையும் ஒரு காரணம் என்று கூறினேன். மக்கள் சிறக்க வாழச் சிறந்த சான்றோர்கள் வேண்டும். சான்றோர் இல்லா நாடு அது நாடாகவே கருதப்படமாட்டாது. எனவே நாட்டிலுள்ள மக்களும் மக்களாகார் சான்றோர்கள் நாட்டிலே வாழ்ந்தால்தான் அந் நாடு சிறக்கும்: நாடும் புகழடையும். எனவே சான்றோர்களின் சூழ் நிலை இருக்கவேண்டுவது அவசியம்.

ஒரு புலவர் வயதிற் பெரியவர். அதே போன்று அறிவிலும் பெரியவர் பாண்டிய நாட்டுப் புலவர் அவர். பிசிர் என்னும் ஊரில் இருந்தார். ஆந்தை என்று பெயர். அவர் சோழ அரசன் கோப்பெருஞ் சோழன் மேல் அளவிலா அன்பு கொண்டார்.

(வரும்)

"நிலை குலைந்த காஞ்சி"

சி. நாராயணசாமி

காஞ்சி மாநகரம் பல்லவப் பேரரசின் தலைநகரம். சீரும், செழுமையும் உடையது. அரசர் உலாப்போகும் அழகான வீதிகளும் அலங்காரமான சதுக்கங்களும் ஆனந்த மிக்க மக்களையும் கொண்டது. அறிஞர்களின் புகலிடம், கலையின் பிறப்பிடம், தொழிலின் சிறப்பிடம், இத்தகு சீர்த்திமிக்க மாநகரத்தையும் வறுமைக் கொடுமை பீடித்தது. இற்றைக்கு 1300 ஆண்டுகட்கு முன்பு!

பல்லவப் பேரரசு தமிழகத்திலே பரவியிருந்த காலம். சேர, சோழ, பாண்டியர்கள் பல்லவச் சக்ரவர்த்தியின் பார்வைக்கஞ்சி பயந் தொளித்த காலம். வடக்கே நருமதைமுதல், தெற்கே குமரிவரை கொடிகட்டியாண்ட நரசிம்மவர்மனின்பேரன் இராசசிம்மன் (கி.பி. 6௦6–0) காலத்தில்தான் இந்தப்பஞ்சம் உண்டாகியது. இதைப் பற்றிச் சீன நூல் ஒன்றும் குறிப்பிடுகிறது. இக் கொடிய பஞ்சம் சுமார் மூன்று ஆண்டுகள் (கி. பி. ‹8௦-89) வரை நீடித்திருந்ததாக அந்நூல் குறிப்பிடுகிறது.

கொடிய பஞ்சம் என்றால் விளைநிலங்கள் வெடித்துக் கிடக்கும். எங்கும்நீர் இன்றி பாலைவன மாகக் காட்சி தரும். பச்சையே பார்க்க முடியாது. விலங்கினங்கள் வெயிலில் சுருண்டு கிடக்கும். தாவரங்கள் கருகிக்கிடக்கும். ஆனால், ஒரு சில குடும்பங்கள் உண்டு உறங்கி நிம்மதியாகக்காலம் கழிக்கும் என்பதல்ல. இராசசிம்மன் காலத்தில் ஏற்பட்ட பஞ்சத்தினால் மக்கள் ஊர் விட்டு ஊர் ஓடலாயினர். விலங்கினங்கள் மந்தை மந்தையாக மடிந்தன. சமயப் பணி செய்வோர் சாவை எதிர்நோக்கிக் கிடந்தனர். கலைஞர்கள் களையிழந்து, கால்கடுக்க வேற்றூர் ஓடலாயினர். அறிஞர்கள் அடக்கமுடியாப் பசிக் கொடுமையால் அரண்மனையை விட்டு வெளியேறினர். அமைச்சர்கள் கவிவாணர்கள் இவ்வளவே இராசசிம்மனின் ஆசிரியர் தண்டி என்பவரே அரசனை விட்டுச் சென்றாரென்றால் அரச குடும்பம் என்ன பாடு பட்டிருக்கும். அரசனும் தன் குடும்பத்துடன் தன்னுடைய பரந்தராச்சியத்தின் எந்தப் பகுதியில் வளமிருக்கிறதென்றுதேட ஆரம்பித்தான். அங்குச் சென்று குடியேற. என்னே கொடுமை! உயர்வு தாழ்வு இன்றி மக்களினத்தை ஒற்றுமைப் படுத்துவது பஞ்சம். அதன் பிடியில் அறிஞரும் அறிவிலியும் ஒன்றேயாகும். அரசனும், ஆண்டியும் சமமே என்பது புலப்படுகிறது.

"தெண்கடல் வளாகவும்
பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய
ஒருமை யோர்க்கும்
நடு நாள்யாமத்துப்
பகலும் துஞ்சான்
கடுமாப்பார்க்கும் கல்லா
ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பன
இரண்டே
பிறவும் எல்லாம்
ஓரொக்குமே!...

என்ற புறநானூற்றுப் பாடலுக்குத்தக்கசான்றாக இருக்கிறது இராசசிம்மனது ஆட்சியின் நிகழ்ச்சி.

அரசனையே, தன்பரந்த பல்லவநாட்டை விட்டுத்துரத்தும் பஞ்சம்–தன்னைச்சுற்றிலும் சாளுக்கியர், பாண்டியர் போன்ற எதிரிகள் சூழ்ந்திருக்க, அவர்களை வென்று நாட்டைக்காக்கவேண்டிய நிலையிலிருந்த இராசசிம்மனை, அவன் எதிரிகளும் எள்ளி நகையாடும்படிச் செய்தவற்கடம் ஏன் வந்தது? செழுமைமிக்க பல்லவ சாம்ராச்சியத்தின் சீர்குலைவுக்குக் காரணமென்ன? போர்! ஓயாப்போர்! ஒழியாப்போர்!

இயற்கையின் மீது பழி போட முடியாது. மனிதனின் இழிசெயலே பல கொடுமைக்குக் காரணம். தான் செய்யும் வினையைச் சீர்தூக்காமல் செய்தவைகளே காரணம். இராசசிம்மன் காலப் பஞ்சம் இப்படி ஒரு காரணத்தின் காரியமே.

மகேந்திரன் —
புலிகேசிப்போர்.
நரசிம்ம வர்மன் —
விக்கிரமாதித்தன் போர்.
பல்லவர் —
பாண்டியர்போர்.
பல்லவர் —
கங்கர்போர்.

(7-ம் பக்கம் பார்க்க)

நான் யார்?

(கவிஞர் கார்வண்ணன்)

மண்ணை நன்ருய் உழுதிடுவேன்
மக்கள் பாலைக் குடித்திடுவார்
எண்ணெய் ஆடும் செக்கைத்தான்
இழுத்துப்போக உதவிடுவேன்
விண்ணை நோக்கும் பயிர்களுக்கு
விரைந்தே நீரை இறைத்திடுவேன்
புண்ணைக் கொத்தும் காகம்தான்
புரியுமோ எந்தன் வருத்தத்தை.

பெட்டை கன்றை ஈன்றிட்டே
பெரிதும் உலகைக் காத்திடுமே
சட்டி வெண்ணெய் நெய்யுந்தான்
சகத்தோர் உண்டு மகிழ்ந்திடுவார்
தட்டிச்சாணம் அடுப்பெரிப்பார்
தந்திடும் நல்லுரம் நிலத்திற்கே
கட்டிச்சாணம் திரு நீறே
கரைத்து வீட்டை மெழுகிடுவார்.

வண்டி இழுத்திட உதவிடுவேன்
வையம் வித்தை காட்டிடுமே
எண்டிசை மக்கள் எந்தனுக்கு
இன்பப் பொங்கல் பொங்கிடுவார்
வண்ணம் கருமை எருமை யென்ருேர்
வகையினர் எந்தன் உறவினரே
நண்பன் நானே உழவர்க்கு
நவின்றிடுவீர் நான் யார் ஐயா?

மணித் திரள்

ஆங்கிலம் உலகின் பல பாகங்களிலும் பேசப்படுகிறது; ஆகையால் அதை உலக மொழியாகவே கருத வேண்டியிருக்கிறது. அதில் எண்ணற்ற கலைச் செல்வங்கள் நிறைந்துள்ளன.

* * * *

நான் ஆங்கிலக் கல்வியை வெறுக்கவில்லை. ஆனால் ஆங்கிலேயர் நம்மை ஆள்வதையே வெறுக்கிறேன்.

ஆங்கில அறிவு இன்றி நம் நாட்டு மக்களின் அறிவு வளர்வது இயலாத தொன்ருகும்.

* * * * *

ஆங்கிலம்தான் மேல் நாட்டு மக்களோடு கீழ்நாட்டு மக்களை இணைக்கிறது. மேலும் அவர்களின் பழக்க வழக்கங்களையும், பண்பாடுகளையும் தெரிந்து கொள்ள உதவுகிறது,

* * * * *

மகாத்மா காந்தியடிகள்

(6-ம்பக்கத் தொடர்ச்சி)

இப்படிப்பல போர்களின் விளைவுதான் இக்கொடும் பஞ்சத்திற்குக் காரணம். தாம் செய்யும் போரினல் பிற நாட்டுச் செல்வம் தம் நாட்டை வளம் செய்யும் என்றுதான் மகேந்திரனும் நரசிம்மனும் எண்ணியிருப்பார். ஆனல் மாருகப் பஞ்சமே வந்துற்றது.

'யாதும் ஊரே, யாவரும் கேளிர், தீதும் நன்றும் பிறர்தரவாரா; நோதலும்,தணிதலும் அவற்ருேரன்ன' என்ற உண்மையை அவர்கள் கடைப்பிடித்திருந்தால் அன்று இந்த இழிநிலை வந்திருக்காது. இன்று நாட்டிற் காணும் சீர்குலைவிற்கும் இது போன்ற நிகழ்ச்சிகளே காரணமாகும்.

([illegible]-ம் பக்கத் தொடர்ச்சி)

செட்டியார். நாட்டில் கல்வியும் கலைகளும் வளர்க்க கோடி கோடியாகப் பெருந் தொகைகளை அள்ளி அள்ளி வழங்கினமை இவ்வுலகம் நன்கறிந்ததல்லவா!

இவ்வுகம் உள்ளவரையில் வள்ளல் செட்டியாரவர்களும் புகழுடலோடு நம்மிடையில் வாழ்வார் என்பதற்குக் காரைக்குடி அழகப்பர் கல்லூரியொன்றே சான்றுசொல்லுமே!

தமிழகத்திற்கும் தமிழ்க்கலைகட்கும் வள்ளல் மறைவு ஈடு சொல்ல இயலாத பேரிழப்பாகும்.

என்று தணியுமிந்த ஈடிலாத் துயரம்!

சி. து. க

குருகுலச் செய்தி:

ஆசிரியர் விரிவுரைகள்

(நடக்க இருப்பன)

கூனம்பேடு:

27-4-57 சனிக்கிழமை மாலை 6-00 மணிக்கு ''திருஞான சம்பந்தர்'' விரிவுரை.

சென்னை:

28-4-57 ஞாயிற்றுக் கிழமை மாலை 6-மணிக்குச் சென்னை சென்ன மல்லிகேஸ்வரர் கோயிலில், 'பெரிய புராணம்' விரிவுரை.

குருபழநி

அழகிய பெயர்! இது, முருகன் அடியார்க்குத் தேனூறல்!

குருபழநி, 'முருக' கோட்டம், காஞ்சி 'குமர' கோட்டம்; கழுக்குன்றம் 'குக' கோட்டம்!

முருகன் குமரன் குகன்
என்று மொழிந்து
உருகும் செயல் தந்து
உணர்வு என்று அருள்வாய்

முருக உருக்கத்துக்கு இது முதல்தலம்; அடுத்தது காஞ்சி; அடுத்தது கழுக்குன்றம்!

அன்பர்கள் இவற்றில் தலவழிபாடு செய்கின்னர்.

செந்தமிழ் நாட்டார் செய்த பெரும் புண்ணியத்தின் பயனாக மேற்கூறிய இயையுகளுடன் 'வடதிருசிற்றம்பலக் குருபழநி முருக கோட்டம்' தமிழகத்துக்கு வாய்ந்திருக்கின்றது.

ஆசிரியர்

* * * *

குருகுலம்

மதுராந்தகத்தை அடுத்த மாம்பாக்கத்தில் குருகுலம் திகழ்கின்றது.

அது, வடதிருச்சிற்றம்பலத் தலம் என்பது, நாளடைவில் தெரிந்தது.

அருணகிரிநாதர் திருப்புகழால் இந்த உண்மை வெளிப்பட்டது. அதனல், இது 'முருக தலம்' என்பதும் விளங்கிற்று.

அவர் திருப்புகழில் குரு உண்மை' வருகின்றது. ஆகவே, 'குருபழநி' யமைப்பும் தெளிவடைந்தது!

குருகுலம் இப்படி அருள் அடிப்படை அமைந்தது!

* * * *

"குருகுலப் பற்பொடி"

குருகுல இல்லத்திலுள்ள
மாணவர்களாலேயே
செய்யப் பெறுகிறது.

இதன் ஆக்கம் ஏழைப் பிள்ளைகளுக்கே சேர்வதால் இதனை ஆதரிப்பது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

குருகுலப் பற்பொடி உயர்தரமானது.

பல் கூச்சம் சீழ் வருதல்
பல் தேய்வு செந்நீர் வருதல்
பல் ஆட்டம் வாய் நாற்றம்

மற்றும் பல் தொடர்பான எல்லா வகை நோய்களையும் போக்கி, ஈறுகளைத் தூய்மையாக வைத்துக் கொள்ள உதவும்.

தமிழ் மருத்துவ முறைப்படி அரிய மூலிகைகள், வேர்வகைகள், மரப்பட்டைகள் சேர்த்துக் காலத்திற் கேற்றவாறு நுட்பமுறையில் செய்யப் பெற்றது.

ஒரு பை விலை 1 அணா

கோ. உலகநாதன்,

செய்கையாளர்:

குருகுலக் கைத்தொழில் நிலையம்
மதுராந்தகம் (அஞ்சல்).
செங்கற்பட்டு மாவட்டம்.

* * * *

ஆர்வலர் சேர்க்கை

ஆண்டுக் காணிக்கை ரூ 5-0-0 செலுத்திக் குருகுலத்தில் ஆர்வலராகச் சேர்ந்துள்ளார் பட்டி. இவர்களுக்கு ஓராண்டுக்கு முல்லைக் கொடி தொடர்ந்து இலவசமாக அனுப்பிவைக்கப் பெறும்.

	முன்வரவு. ரூ—955-0-0	திரு ஜி. சக்திவேல்	5
சென்னை:	ரூ	திரு விஜயராகவன்	5
திரு ச. மா, கோவிந்தராசலு	5	திரு கே. இராமதாஸ்	5
திரு வி. நாகராசன்	5	திரு பி. கண்ணப்ப முதலியார்	5
திரு எம். ஆர். துரைசாமி	5	திரு பி, எம். செல்வராசன்	5
திரு எம். மாயாண்டி நாடார்	5		
திரு முகமத் ச. சாப்	5		
திரு கே. ஆறுமுகம்	5	ஆக ரூ	1010-0-0

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்,
குருகுல அச்சகம், மதுராந்தகம் (அஞ்சல்); செங்கற்பட்டு மாவட்டம்: தமிழ்நாடு.